


**26. 09. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. **மனித நாகரீகத்தின் வளர்ச்சியில் கனிமவளங்கள்** முக்கிய பங்காற்றுவதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு எடுத்துரைத்தார்.

2. **பெண்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்யும்** நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

3. **தமிழ்நாட்டில் பல்வேறு துறை சார்ந்த திட்டங்களை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின்** சென்னையில் இன்று தொடங்கி வைத்தார்.

4. **தமிழகத்தில் முறையான அனுமதியின்றி செயல்படும்** காப்பகங்கள் மூடப்படும் என்று மாநில அமைச்சர் திருமதி. கீதாஜீவன் அறிவித்துள்ளார்.

5. **தைவானில் நடைபெறும் சர்வதேச பேட்மிட்டன் போட்டியின்** மகளிர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் **Isharani** முன்னேறியுள்ளார்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

**மனித நாகரீகத்தின் வளர்ச்சியில் கனிமவளங்கள் முக்கிய** பங்காற்றுவதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

புதுதில்லியில் தேசிய புவி அறிவியல் விருதுகளை இன்று வழங்கி பேசிய அவர், நிலக்கரி மற்றும் இரும்பின் பயன்பாடு இல்லாமல் தொழில்மயமாக்கல் சாத்தியமில்லை என்று தெரிவித்தார்.

இத்துறைகளில் அர்ப்பணிப்பு புதுமை மற்றும் சிறந்த சேவையாற்றியதற்காக விருதாளர்களை குடியரசு தலைவர் வாழ்த்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

**நாட்டில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும்** சுயதொழில் தொடங்க பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

பீஹாரில் மகளிர் வேலைவாய்ப்பு திட்டத்தை இன்று காணொலி மூலம் தொடங்கிவைத்து பேசியஅவர், மகளிருக்கு அதிகாரமளிப்பதை இந்த திட்டம் நோக்கமாக கொண்டுள்ளதாக கூறினார்.

மகளிர் வேலைவாய்ப்பு பெறும்போதும், சுயதொழில் தொடங்கும்போதும் அது அவர்களுடைய கனவுகளுக்கு புதிய சிறகுகளை வழங்குவதாக குறிப்பிட்டார்.

மத்திய அரசின் முத்ரா கடன், சஹி காப்பீடு திட்டம், ட்ரோன் தீதி போன்ற பல்வேறு திட்டங்கள் மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வகை செய்வதாக தெரிவித்தார்.

பீஹாரில் பிரதமர் இன்று தொடங்கி வைத்த திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதும் 75 லட்சம் மகளிரின் வங்கி கணக்கில் தலா 10 ஆயிரம் ரூபாய் நேரடியாக விடுவிக்கப்பட்டது.

இதனிடையே முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின் பிறந்த தினத்தை ஒட்டி அஞ்சலி செலுத்திய பிரதமர், பொதுவாழ்வில் அவர் ஆற்றிய நீண்டகால சேவை மற்றும் நாட்டிற்கான பங்களிப்பை நினைவுகூர்ந்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

.. மியூசிக் ..

சேவை நல்லாட்சி என்ற தாரக மந்திரத்துடன், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசு ஆக்கப்பூர்வமான மாற்றங்களுக்கு அயராது செயலாற்றி வரும் நிலையில், விண்வெளித் துறையை புதிய உச்சங்களுக்கு மோடி அரசு கொண்டுசென்றுள்ளது குறித்த சிறப்பு செய்தித்தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. மியூசிக் ..

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் தலைமையின் கீழ் விண்வெளித்துறை அளப்பரிய சாதனைகளுடனும், புதிய கண்டுபிடிப்புகளுடன் பயணித்து வருகிறது.

தேசிய விண்வெளி தினமான ஆகஸ்ட் 23-ம் தேதியன்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தமது உரையில் விண்வெளித் துறையின் தொடர் சாதனைகள் குறித்து பெருமிதம் தெரிவித்தார்.

.. பிரதமர் வாய்ஸ் ..

செமி கிரயோஜனிக் இன்ஜின், உந்துவிசை தொழில் நுட்பங்களின் வேகமான வளர்ச்சி, விண்வெளியில் டாக்கிங் அன் டாக்கிங் எனப்படும் இணைத்தல், பிரித்தல் தொழில்நுட்ப திறனுடன் 4-வது நாடாக உலகளவில் இந்தியா தன்னை நிலை நிறுத்தியுள்ளது.

குரூப் கேப்டன் சுபான்ஷு ஷுக்லாவின் வெற்றிகரமான விண்வெளி பயணம் 2035-ம் ஆண்டு நம்நாட்டின் சர்வதேச விண்வெளி மையத்தை அமைப்பதற்கான இலக்கு போன்ற பல்வேறு சாதனைகளை நம்நாடு படைத்துள்ளது.

பிரதமர் திரு. நரேந்திரமோடி அரசின் சீரிய கொள்கைகளாலும், சீர்த்திருத்தங்களாலும் விண்வெளி தொழில்நுட்பத்தில் தனியார் துறையினரும் பங்கேற்க வகை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மத்திய அரசின் ஆக்கப்பூர்வ நடவடிக்கைகள் காரணமாக இந்திய விண்வெளித்துறையின் சாதனைகள் உலகளவில் இந்தியாவின் மதிப்பை உயர்த்தியுள்ளதாக திருச்சி பாரதிதாசன் திறந்தவெளி பல்கலைக்கழக இயற்பியல் துறை பேராசிரியர் டாக்டர் குமார் தெரிவிக்கையில்

.. பயனாளி வாய்ஸ் ..

வேளாண் தொழில்நுட்பம், மீனவர் பாதுகாப்பு, பேரிடர் மேலாண்மை, கட்டமைப்பில் புவிசார் தரவுகளுடன் விண்வெளி துறை பிரதமர் திரு. நரேந்திரமோடியின் ஆட்சியின் கீழ் எழுச்சியுடன் மிளர்கிறது என்பது மிகையல்ல.

.. மியூசிக் ..

❖❖❖❖❖❖❖❖❖

**சரக்கு சேவை வரி**

சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் நாட்டின் மறைமுக வரி கட்டமைப்பை எளிதாக்கியுள்ளது.

புதிய வரி கட்டமைப்பின் கீழ் இரண்டடுக்கு வரி முறை மட்டுமே நடைமுறைபடுத்தப்பட்டுள்ள நிலையில், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறையில் இந்த வரிகுறைப்பு பெரிதும் பயனளிக்கும் என்று திருச்சி மாவட்ட குறு சிறு தொழிற்சங்கத்தின் துணைத்தலைவர் திரு. ராஜாராம் பேசுகையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னை** பொது நூலக இயக்ககத்தின் சார்பில் 39 கோடியே 33 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 146 நூலக கட்டடங்களை சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி மூலம் இன்று திறந்துவைத்தார்.

தமிழ்நாடு பாடநூல் கல்வியியல பணிகள் கழகம் சார்பில் 26 புதிய நூல்களை வெளியிட்டார்.

சென்னை கிண்டி தொழில்பேட்டையில் 23 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் தலைமை அலுவலக கட்டடத்தை இன்று திறந்து வைத்தார்.

முன்னதாக மறைந்த பழம்பெரும் நடிகர் ஜெய்சங்கரின் நினைவாக அவர் வசித்த சென்னை நுங்கம்பாக்கம் கல்லூரி பாதைக்கு ஜெய்சங்கர் சாலை என்று பெயர் சூட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖

**உதயநிதி ஸ்டாலின்**

**விளையாட்டுத்துறையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக** திகழ்கிறது என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சியில் இன்று பேசியஅவர், கடந்த 4 ஆண்டுகளில், 4 ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகளுக்கு 150 கோடி ரூபாய் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும்,

நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு அரசு துறைகளில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

**கீதாஜீவன்**

**தமிழகத்தில் முறையான அனுமதியின்றி** செயல்படும் காப்பகங்கள் மூடப்படும் என்று மாநில சமூக நலன் மற்றும மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் அறிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் பெண் குழந்தைகளை பாதுகாப்போம் ! பெண்குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் அங்கன்வாடி செவிலியர்கள், பணியாளர்களுக்கு பயிற்சி

அளிக்கும் திட்டத்தை இன்று தொடங்கி வைத்து பேசியஅவர், இதுவரை உரிய அனுமதி பெறாத 600 காப்பகங்கள் மூடப்பட்டுள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

**சிவகங்கர்**

**அரியலூர் மாவட்டத்தில் மருதையாற்றின் குறுக்கே** 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டப்படவுள்ளதாக மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

அரியலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், இப்பணிகள் நிறைவடையும் போது சுற்றுவட்டாரப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதோடு, விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள் என்று கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

**இருவரி**

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் 71-வது** நினைவுநாளையொட்டி கன்னியாகுமரி மாவட்டம் சுசீந்திரத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு ஆட்சித்தலைவர் திருமதி. அழகுமீனா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

**மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகாரில்** தொல்லியல்துறை சார்பில் கடல்சார் அகழ்வாராய்ச்சியில் 20 பேர் கொண்ட குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

பழந்தமிழ் நாகரீகத்தின் தொன்மையை ஆராயும் விதமாகவும், தமிழகர்களின் பண்டைய வரலாற்றை உலகளவில் பறைசாற்றும் விதமாகவும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**உடல் உறுப்பு தானம் செய்வதில் திருநெல்வேலி** அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

மாவட்ட ஆட்சியர் திரு.சுகுமார், இதற்கான விருதை மருத்துவ கல்லூரி முதல்வருக்குஇன்று வழங்கி பாராட்டினார்.

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற** தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாமில் முன்னிணி நிறுவனங்கள் பங்கேற்று நூற்றுக்கும் மேற்பட்ட பணியாளர்களை தேர்வுசெய்தது.

**விருதுநகர் மாவட்டம் மேகமலை புலிகள் சரணாலய** வனப்பகுதியில் 3-வது நாளாக பற்றி எரியும் காட்டுத்தீயை அணைக்கும் பணியில் வனத்துறையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

**சிவகங்கை மாவட்டத்தில் மத்திய அறிவியல்** மற்றும் தொழிலக ஆய்வுக்குழுமத்தின் நிறுவன நாளை முன்னிட்டு காரைக்குடி மின் வேதியியல் ஆய்வகத்தை இன்றும் நாளையும் பார்வையாளர்கள் பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**வானிலை**

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக கோவை மாவட்ட மலைப்பகுதிகள் திருநெல்வேலி, நீலகிரி, தேனி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று மழைபெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**தைவானில் நடைபெறும் சர்வதேச** பேட்மிட்டன் போட்டியின் மகளிர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் **Isharani** முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற காலிறுதியில் அவர் தைவானின் **Yu-Hsun Huang-**ஐ 21-14, 21-18 என்ற நேர் செட்களில் வென்றார்.

❖❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**துபாயில் நடைபெறும் ஆசிய கோப்பை 20-20** கிரிக்கெட் சூப்பர் 4 சுற்றின் கடைசி ஆட்டத்தில் இந்தியா இன்று இலங்கையை எதிர்கொள்கிறது.

நாளைமறுநாள் நடைபெறும் இறுதிப்போட்டியில் இந்தியா - பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

❖❖❖❖❖❖❖❖